அதற்குப் பிறகு சில வசதிகளை நாம் செய்து கொடுத்ததன் பயனாக மீண்டும் துவக்கினார்கள். எனக்கு இருக்கிற தகவல் அது சில மாதம் ஓடிவிட்டு மீண்டும் நின்று விட்டது என்பதாகும். அதற்குக் காரணம் மணிலாவின் விலை தாறுமாறாக ஏறிக்கொண்டிருக்கிற காரணத்தினால் அவர்கள் அதை வாங்கி ஸ்டாக் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்றும், அதனால் ஓட்டமுடியவில்லை என்றும் தெரிகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, வனஸ்பதித் தொழிற்சாலை நடத்துவதற்கான மூலப் பொருளாக இருக்கிற வேர்கடலை நமது மாநிலத்தில் நிறைய இருக்கிறது. வேறு மாநிலங்களில் உள்ள வனஸ்பதி தொழிற்சாலைக்கு வேண்டிய வேர்கடலை கூட இங்கிருந்து ஏற்றுமதியாகிறது. பிற நாடுகளுக்குக் கூட ஏற்றுமதி செய்யப்படுகிறது. மூலப் பொருள் இங்கேயே கிடைக்கிற நிலையில், பொருளாதார வசதி, நிர்வாகத் திறமை யின்மை காரணமாகத் தொழிற்சாலை நின்று விட்டதாகத் தெரிவித்தார்கள். கூட்டுறவுத் துறையில் அல்லது அரசாங்கத் துறையில் இந்தத் தொழிற்சாலை நிறுவப்படுமானால் இதைச் செம்மையாக நடத்த வழிவகை ஏற்படாதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : என்னுடைய கருத்து வனஸ்பதி தொழிற்சாலையை சர்க்கார் நடத்தக் கூடாது என்பது ஏனென்றால் மணிலாவின் விலை இன்டர்நேஷனல் மார்க்கெட் ப்ரைஸைப் பொறுத்து இருக்கிறது. விலை அதிகமாகவும், குறைவாகவும் போகக் கூடிய பொருளாக இருக்கிறது. அப்போதைக்கப்போது கண்காணித்து மணிலாவை வாங்கி, தொழிற்சாலையை அந்தத் துறைகளில் நடத்த முடியாது என்பது என்னுடைய அபிப்பிராயம். கூட்டுறவுத் துறையிலோ அல்லது சர்க்கார் துறையிலோ நடத்துவது நஷ்டத்தில் தான் கொண்டுவிடும்.

Banana Package Scheme

* 437 *Q.*—SRI V. S. S. MANI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether Special District Agricultural Officers have been appointed under the Banana Package Schemes;

(*b*) if so, their functions; and

(*c*) whether there is any proposal to distribute the agricultural loans under the Package Scheme through Special District Agricultural Officers instead of through Co-operative Societies?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) இந்த தீவிர திட்டத்தின் கீழ், மாவட்ட வேளாண்மைச் சிறப்பு அதிகாரி ஒவ்வொருவரும், ஒவ்வோர் ஆண்டும், **4,000** ஏக்கர் வாழை பயிரிடுவதற்கு வகை செய்யவேண்டும். அதற்காக அவர் கீழ்க்கண்ட தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்வார் :—

(1) நல்ல, நோய் பீடித்திராத தரமான வாழைக்கன்றுகளை வழங்குதல்.

[5th November 1966

(2) செடிப் பாதுகாப்புக்குரிய இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்துவதன் மூலம், வாழைக்கன்றுகளுக்கு நோய் பரவாமல் பாதுகாத்தல்.

(3) பரிந்துரைக்கப்பட்ட அளவில் உரங்களைப் பயன் படுத்தல்.

(4) மேம்பாடடைந்த, வேளாண்மை, பொருளாதார முறைகளை மேற்கொள்ளல்.

(5) செடிப் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

(உ) இல்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஸார், அதி தீவிர வாழை சாகுபடித் திட்டத்தின் கீழ் திண்டுக்கல்லில் தனி விவசாய அதிகாரி நியமிக்கப் பட்டுள்ளார். அவர்களால் லோன் ப்ரொபோஸல்கள் 200-க்கு மேல் க்ரெடிட் சொஸைட்டிகளுக்கு அனுப்பப்பட்டன. அவைகள் காரணம் இல்லாமல் நிராகரிக்கப்பட்டன. எனவே விவசாயிகளுக் குத் தொல்லையாக இருக்கிறது. க்ரெடிட் சொஸைட்டி மூலமாக வழங்குவதைத் தவிர்த்து டிபார்ட்மெண்ட் மூலமாகக் கொடுத்து விடச் செய்தால் விவசாயிகளுக்கு சௌகரியமாக இருக்கும் என்று சொல்லுவதுடன், ஏன் அவ்விதம் செய்யக் கூடாது என்று கேட்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : விவசாய இலாகா மூலமாக ப்ளான் தயார்செய்து கூட்டுறவு மூலமாகத் தான் கொடுக்கிறார்கள். விவசாய இலாகா மூலமாக இல்லை.

திரு. கோ. சி. மணி : ஆடுதுறை வாழை ஆராய்ச்சிப் பண்ணை சார்பாக, கடன் வழங்கும் முறையில் இருக்கும் கோளாறுகளைப் பற்றிப் பரிசீலனை செய்து நல்ல ரிப்போர்ட் அனுப்பப்பட்டிருக்கிற தா ? அதன் விவரம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

உப்பளங்கள் (பழைய காயல்)

* 438 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லா பழைய காயல் ஹரிஜனங்களின் உப்புப் பாத்திகளுக்கு வண்டி, லாரி செல்ல பாதை கோரி கடந்த 10 ஆண்டுகளாக முறையிட்டு வந்தார்களா ?

(இ) அதன்மீது எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கை யாது ?

(உ) ஹரிஜனங்கள் கோரும் பாதையைத் தவிர்த்து வேறு சுற்று வழியாக பாதை அமைக்க ஆர்ஜித நடவடிக்கை எடுத்து வருவது உண்மையா ?

(எ) ஹரிஜனங்கள் கோரும் வழியாக பாதை அமைத்துக் கொடுப்பதில் என்ன கஷ்டமிருக்கிறது ?